பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

23 04 2024 **TUESDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அரசியல் சாசனத்தை மாற்றவும், இடஒதுக்கீட்டை ரத்து செய்யவும் பிஜேபி முயல்கிறது என்ற காங்கிரஸின் குற்றச்சாட்டை அக்கட்சியின் மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

2. உத்தரபிரதேசத்தின் மேற்கு பகுதியை பிரித்து தனி மாநிலம் உருவாக்க தமது கட்சி நடவடிக்கை எடுக்கும் என்று பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் செல்வி மாயாவதி தெரிவித்துள்ளார்.

3. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஒருங்கிணைப்பு, இந்தோ-பசிபிக் மண்டலத்தை வலுப்படுத்தும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

4. தில்லி மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால், **BRS** கட்சியின் திருமதி. கவிதா ஆகியோரின் நீதிமன்றக் காவல் அடுத்த மாதம் 7ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

அரசியல் சாசனத்தை மாற்றியமைக்கவும், இடஒதுக்கீட்டை ரத்து செய்யவும் பிஜேபி முயல்வதாக காங்கிரஸ் கட்சியினர் உண்மைக்கு மாறான தகவல்களை கூறி வருவதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சத்திஷ்கர் மாநிலம், **Jaangirchampa** தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தை யாராலும் மாற்ற முடியாது என்று கூறினார்.

அனைவரின் ஒத்துழைப்புடன் அனைவருக்குமான வளர்ச்சி என்ற தாரக மந்திரத்துடன், கடந்த பத்தாண்டுகளில் பல்வேறு நலத்திட்டங்களை மக்களுக்கு அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஏழை, எளியோர், இளைஞர்கள், மகளிர், மற்றும் விவசாயிகளுக்கான நலத்திட்டங்களுக்கு பிஜேபி முன்னுரிமை அளித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

வேளாண் துறையில் பெண்களின் பங்களிப்பை உறுதி செய்யும் நோக்கில் ட்ரோன் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களை திறம்பட கையாள்வதற்கான பயிற்சி மகளிருக்கு அளிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மகளிர் சுயஉதவி குழுக்களை சேர்ந்தவர்கள் நேரடியாக பயன்பெறும் வகையில், 3 கோடி மகளிரை லட்சாதிபதியாக்கும் திட்டம் கொண்டு வரப்பட்டதாவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>><<<<<

நாட்டில் கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வேலைவாய்ப்பின்மை அதிகரித்து காணப்படுவதாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி. பிரியங்கா காந்தி வதேரா தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலம், சித்திரதுர்காவில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், நாட்டில் தற்போது அதிகரித்து வரும் பணவீக்கத்தையும் வேலைவாய்ப்பின்மையையும் மறைக்கமுடியாது என்று கூறினார்.

சமையல் எரிவாயு சிலிண்டர், பெட்ரோல், டீசல், தங்கம், வெள்ளி ஆகியவற்றின் விலை அதிகரித்துள்ளதால் மக்கள் இன்னலுக்கு உள்ளாகியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

பெரும் முதலாளிகளின் கடன்களை தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கையை எடுத்த, தேசிய ஜனநாயக கூட்டணி அரசு விவசாயிகளின் கடன்களை ரத்து செய்யவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

நாடு வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறுவது ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை என்றும் திருமதி. பிரியங்கா குறிப்பிட்டார்.

>>>>><<<<<

உத்தரபிரதேச மாநிலத்தில் வரும் 26ஆம் தேதி எட்டு தொகுதிகளில் நடைபெறும் இரண்டாம் கட்ட தேர்தலுக்கான பிரச்சாரத்தில் பிஜேபி, பகுஜன் சமாஜ், சமாஜ்வாதி உள்ளிட்ட கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

பிஜேபி மூத்த தலைவர் திரு. ராஜ்நாத் சிங், கவுதம்புத்நகர் மாவட்டத்தில் மேற்கொண்ட பிரச்சாரத்தில், உத்தரபிரதேச மாநிலம் வர்த்தக மையமாக உருவாவதற்கு மத்தியிலும் மாநிலத்திலும் உள்ள பிஜேபி அரசுகள் பங்களித்துள்ளதாக தெரிவித்தார்.

சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ், அலிகாரில் மேற்கொண்ட பிரச்சாரத்தில் வெறுப்பு அரசியலில் ஈடுபடும் கட்சிகளுக்கு எதிராக மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று கூறினார்.

பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் செல்வி மாயாவதி, மீரட் மாவட்டத்தில் மேற்கொண்ட பிரச்சாரத்தில், உத்தரபிரதேச மாநிலத்தை பிரித்து மேற்கு உத்தரபிரதேசம் என்ற புதிய மாநிலத்தை அமைக்க, தமது கட்சி நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்தார்.

மீரட்டில் உச்சநீதிமன்ற கிளையை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று செல்வி மாயாவதி கூறினார்.

>>>>><<<<<

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வலுவான – ஒருமித்த ஒத்துழைப்பு இந்தோ பசிபிக் மண்டல கட்டமைப்பை வலுப்படுத்தும் என்று இந்தியா நம்பிக்கை கொண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஆசியான் ஒத்துழைப்பு மாநாட்டில் காணொலி வாயிலாக பங்கேற்ற அவர், இந்தியா முன்னெடுத்துள்ள இந்தோ – பசிபிக் பெருங்கடல் மண்டல திட்டம், ஒத்துழைப்பையும், பாதுகாப்பையும் உறுதி செய்துள்ளதாக கூறினார்.

இந்தியாவின் கிழக்கத்திய கொள்கையில், ஆசியான் நாடுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகின் தென்பகுதி நாடுகள் சர்வதேச விவகாரங்களில் தற்போது முக்கிய பங்காற்றி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

க்வாட் ஒத்துழைப்பு நாடுகளும், ஆசியான் நாடுகளுக்கு உறுதியான ஆதரவை அளித்து வருவதாகவும் திரு. ஜெய்சங்கர் கூறினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் உள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த பணியாளர்கள், சொந்த மாநிலத்திற்கு சென்று வாக்களிக்க ஏதுவாக வாக்குப்பதிவு நடைபெறும் நாட்களில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்க வேண்டும் என்று அந்நிறுவனங்களை தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் கீழ், இந்த விடுமுறையை அண்டை மாநிலங்களைச் சேர்ந்த தினக்கூலி, தற்காலிக, ஒப்பந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்படுவதை அனைத்து நிறுவனங்களும் உறுதி செய்ய வேண்டும் என்றும் இன்று வெளியான மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

கேரளாவில் வரும் 26ஆம் தேதியன்றும், ஆந்திராவில் அடுத்த மாதம் 13ஆம் தேதியன்றும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

கர்நாடகாவில் இம்மாதம் 26ஆம் தேதி மற்றும் அடுத்த மாதம் 7ஆம் தேதி என இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

தில்லி மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால், **BRS** கட்சியின் திருமதி. கவிதா ஆகியோரின் நீதிமன்றக் காவல் அடுத்த மாதம் 7ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை பிறப்பித்த தனி நீதிபதி காவேரி பவேஜா, இவர்கள் இருவரையும் அடுத்த மாதம் 7ஆம் தேதி பிற்பகல் 2 மணிக்கு காணொலியில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு திஹார் சிறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

>>>>><<<<<

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி தொடர்ந்து ஏறுமுகமாகவே உள்ளது என்று இந்திய ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

மும்பையில் இன்று வெளியிடப்பட்ட ரிசர்வ் வங்கியின் ஏப்ரல் மாத அறிக்கையில், முதலீட்டுக்கான தேவை அதிகரிப்பு, வர்த்தக வளர்ச்சி மற்றும் நுகர்வோரின் எதிர்பார்ப்புகள் ஆகியவை உள்நாட்டு உற்பத்தியை ஊக்கப்படுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையிலான பணவீக்கம், கடந்த மார்ச் மாதத்தில் ஐந்து புள்ளி ஒன்று சதவீதம் என்ற சராசரி அளவிலிருந்து, நான்கு புள்ளி ஐந்து சதவீதமாக குறைந்துள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்களின் கையிருப்பு, விலைவாசி குறைவதற்கான காரணியாகவும் அமைந்துள்ளது என்று ரிசர்வ் வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மேற்காசிய பகுதிகளில் பூகோள அரசியலில் நிலவிய பதற்றம் சற்று தணிந்ததை அடுத்து, கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ளது. **Brent** கச்சா எண்ணெய் விலை பீப்பாய் 86 டாலராக உள்ளது.

>>>>><<<<<

விமானப் பயணம் குறித்து சிவில் விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநரகம் திருத்தியமைக்கப்பட்ட நெறிமுறைகளை அறிவித்துள்ளது.

12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான இருக்கை ஒதுக்கீடு தொடர்பாக புதிய திருத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பெற்றோர்களுக்கு அருகிலேயே அமருவதற்கான நடைமுறையை பின்பற்ற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் முன்னுரிமை இருக்கை, உணவு, குளிர்பானம் போன்றவற்றிற்கான கட்டணங்கள் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

பிரிட்டனில் சட்டவிரோதமாக குடியேறிய ருவாண்டா நாட்டவர்களை அந்நாட்டுக்கு திருப்பி அனுப்ப வகை செய்யும் மசோதா பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இன்னும் 10 முதல் 12 வாரங்களில் அப்பணி தொடங்கும் என்று பிரிட்டன் பிரதமர் திரு. ரிஷிசுனக் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

துபாயில் நடைபெற்று வரும் வளைகுடா நாடுகள் தகவல் பாதுகாப்பு கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் இந்தியாவின் இணையதள பாதுகாப்பு தொழில்துறை முக்கிய இடத்தை பிடித்துள்ளது.

இந்தியாவின் 22 நிறுவனங்கள் இந்த கண்காட்சியில் தங்களது படைப்புகளை கொண்டு வந்துள்ளன.

இணையதள பாதுகாப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நவீன முன்னேற்றங்களை உலகிற்கு எடுத்துச் சொல்லும் வகையில் பல்வேறு தொழில்நுட்ப உபகரணங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

சர்வதேச சந்தையில் இந்திய இணையதள பாதுகாப்பு தொழில்கள் சிறப்பான இடத்தை பிடிப்பதற்கு இந்த கண்காட்சி உதவிடும் என்று துபாயில் உள்ள இந்திய துணைத் தூதர் திரு. சத்திஷ்குமார் சிவன், கருத்தரங்கில் பேசுகையில் தெரிவித்தார்.

>>>>><<<<<

நாட்டின் கிழக்கு மாநிலங்களில் அடுத்த நான்கு நாட்களுக்கு வெப்பம் அதிகரித்து காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒடிசா, ராயலசீமா, விதர்பா, சத்திஷ்கர், தெலங்கானா, மத்தியப்பிரதேசத்தின் தென்மேற்குப் பகுதி, ஆந்திர கடற்கரையோர பகுதிகளில் வெப்பம் 42 முதல் 45 டிகிரி செல்சியஸ் வரை உயரும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தென்தமிழகம் மற்றும் மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணிக்கு எதிராக டாஸ் வென்ற லக்னோ அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

சென்னையில் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

>>>>><<<<<

சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ரித்துஜா போஸ்லே – நியூஸிலாந்தின் **Mary Hourigan** இணை காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

சீனாவின் **Wuning-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல்சுற்று ஆட்டத்தில் இந்த இணை 5-7, 6-3, 10-5 என்ற செட்கணக்கில் சீனாவின் **Yiming Dang – Jing-Jing Lu** இணையை வென்றது.

**>>>>><<<<<**

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் ஒடிசா அணி இன்று மோகன் பஹான் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி, புவனேஷ்வரில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

**>>>>><<<<<**

கஜகஸ்தானில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு, இந்தியாவின் **Prajwal Dev** மற்றும் **Smriti Bhasin** ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

**>>>>><<<<<**

உலக கோப்பை வில்வித்தைப் போட்டி சீனாவின் ஷாங்காய் நகரில் இன்று தொடங்கியது.

இப்போட்டியின் மகளிர் குழுப் பிரிவு தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் முன்னணி வீராங்கனைகளான தீபிகா குமாரி, பஜன் கவுர், அங்கிதா பகத், கோமாலிகா பாரி உட்பட 8 பேர் பங்கேற்றுள்ளனர்.

**>>>>>END<<<<<**